முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

அ.வ.எண்.**111/2023**

2025-ம் வருடம் ஜுன் திங்கள் 24-ம் நாளன்று வாதி சாட்சியாக வா.சா.1-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : தங்கராசு | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை:-

நான் இவ்வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன்.

கடந்த 21.02.2020 ஆம் தேதியன்று வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த மணப்பாறை சார்பதிவக ஆவண எண்.1051/2020 பதிவு செய்யப்பட்ட கிரைய அக்கிரிமெண்ட் பத்திரம் அசல் வா.சா.ஆ.1.ஆகும். கடந்த 04.02.2023 ஆம் தேதியன்று வாதி சார்பில் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2.ஆகும். கடந்த 06.02.2023 ஆம் தேதியன்று வாதி சார்பில் அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பை பிரதிவாதி

பெற்றுக்கொண்ட பதிவஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.3.ஆகும். கடந்த 15.02.2023 ஆம் தேதியன்று பிரதிவாதியின் பொய்யான சங்கதிகளுடன் கூடிய பதில் அறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.4.ஆகும். கடந்த 10.02.2023 ஆம் தேதியன்று மணப்பாறை சார்பதிவகத்தில் வாதி கிரையம் பெற தயார் நிலையில் இருந்த புகைப்படங்கள் 4 எண்ணிக்கைகள் அசல் வா.சா.ஆ.5.ஆகும். கடந்த 10.02.2023 ஆம் தேதியன்று மணப்பாறை சார்பதிவகத்தில் வாதி தாக்கல் செய்த நகல் மனு விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.6.ஆகும். வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.